# போக்குவரத்து துறையிலுள்ள பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் குறிப்புகள்

v 1.0 - 21/05/2020

COVID-19 தொற்று என்பது ஆயிரக்கணக்கானோரின் வாழ்க்கை முறையிலும் பணிபுரியும் முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை, முடங்கியுள்ள தமது பொருளாதாரங்களை மீட்டெடுப்பதில் ஒவ்வொரு நாடும் ஆர்வத்துடன் உள்ளன. பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் தமது செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கான திட்டங்களை வகுத்த வண்ணமுள்ளன.

இந்த செயற்பாடுகளிடையே, போக்குவரத்து துறையில் பணியாற்றும் நபர்கள் தமது பணியை முன்னெடுக்கும் போது பாதுகாப்பை உறுதி செய்து கொள்வதில் தமக்கென பிரத்தியேகமான சவால்களுக்கு முகங்கொடுப்பார்கள். COVID-19 பாதுகாப்பு வழிமுறைகளில் சமூக தூரப்படுத்தல், பிரத்தியேக தூய்மை மற்றும் சுவாசத் தொகுதியின் தூய்மை போன்றன குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், இந்த பணியாளர்களுக்கு அவற்றை பின்பற்றுவதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன. இந்த வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகள், இவ்வாறான பணியாளர்களுக்கு பாதுகாப்பாக இருப்பதுடன், உற்பத்தித்திறனான முறையில் பணியை முன்னெடுக்க ஏதுவாக அமைந்திருக்கும்.

# இடரை புரிந்து கொள்ளல்

- COVID-19 எவ்வாறு பரவுகின்றது என்பதைப் பற்றியும், அதன் பாரதூரத்தன்மையையும் அறிந்திருப்பது.
- தொற்றின் தன்மை காரணமாக, நீங்கள் நோய்வாய்ப்பட வாய்ப்புள்ளதுடன், அதன் காரணமாக வைரஸ் காவியாக திகழ்வதற்கும் வாய்ப்புள்ளது.
- ஏனைய தொற்று நோய்களுடன் ஒப்பிடுகையில் COVID-19 இலிருந்து குணமடைவதற்கு நீண்ட காலம் தேவைப்படும்.
- ஏற்கனவே நோய் நிலைமைகளை கொண்டுள்ளவர்கள் இந்த தொற்றினால் பாதிக்கப்பட அதிக வாய்ப்பை கொண்டிருப்பதுடன், உயிரிழப்பு வீதத்தில் அதிக பங்களிப்பை வழங்கியுள்ளனர்.
- எவ்விதமான அறிகுறிகளையும் வெளிப்படுத்தாத நோயாளர்கள் காணப்படக்கூடும் என்பதுடன், அவர்கள் நோய் காவிகளாக அமைந்திருப்பதால், நோய்த் தொற்று பரவக்கூடும்.

# டிலிவரி சேவைகள்

- சன நெரிசல்கள் மற்றும் நெருக்கடி காலப்பகுதியில் வெளிப்படுத்தலை குறைக்கும் வகையில் விஜயங்களை நிர்ணயித்தல்.
- எதிர் எதிரான வகையில் சரக்கேற்றல் அல்லது பிக்-அப் நேரங்களை நிர்ணயிக்கவும்.
- அடையாளமிடல் மற்றும் குறிப்பிடலுடன் பிக்-அப் மற்றும் சேகரிப்பு பகுதிகளை ஏற்பாடு செய்யவும்.
- இயலுமான வரை, ஒரு நபரை வாகனத்தில் பொருட்களை ஏற்றி அல்லது இறக்கச் செய்யவும்.
- நுழைவாயில் பாதுகாப்பு பகுதி, யார்ட் அல்லது களஞ்சிய பகுதியில் அநாவசிய தொடுகைகளை தவிர்க்கவும். உதாரணமாக: முன்னரே திட்டமிடப்பட்ட தொடுகையற்ற டிலிவரிகள்.
- இலத்திரனியல் ஆவணங்களின் பாவனையை அதிகரித்து மீளாய்வு செயன்முறைகளை பாதுகாப்பான ஆவணங்கள் பரிமாற்றத்துக்கு வழியமைத்தல். உதாரணமாக: அவசியமான போக்குவரத்து ஆவணங்கள்.
- ஒரு வாகனத்தில் ஒன்றாக பணியாற்றும் நபர்கள் இயலுமானவரை மாறுபடுத்தப்படாமல் ஒரே ஜோடியாக இருத்தல் வேண்டும்.
- இயலுமானவரை சாரதிகளை தமது வாகனத்தினுள் இருக்க ஊக்குவிப்பதனூடாக, அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதுடன், ஏற்கனவே காணப்படும் பாதுகாப்பான பணியாற்றல் செயன்முறைகள் பாதிப்படையாமல் பேண முடியும்.
- சாரதிகளுக்கு போதியளவு ஹான்ட் சனிடைசர்கள், வைப்கள், டிஷுக்கள் மற்றும் குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும்.
- ஒவ்வொரு பிக்-அப் மற்றும் டிலிவரியின் பின்னரும் சாரதி தமது கரங்களை தொற்று நீக்கம் செய்ய வேண்டும். சுக்கான், கியர் பிடி மற்றும் இதர அடிக்கடி தொடும் பகுதிகளையும் தொற்று நீக்கம் செய்ய வேண்டும்.
- புகைபிடிக்க அல்லது வெற்றிலை மெல்ல அனுமதிக்க வேண்டாம்.
- வாகனம் டிலிவரியை பூர்த்தி செய்த பின்னர் அது துப்புரவு செய்யப்பட்டு தொற்று நீக்கப்பட வேண்டும் - குறிப்பாக அடிக்கடி தொடுகைக்குட்படும் கதவு பிடிகள் போன்ற பகுதிகள்.



# பயணிகள் போக்குவரத்து – பேருந்துகள்

- பிரவேச பகுதிகள் அடங்கலாக உள்ளக பகுதிகள் ஒவ்வொரு பயண ஆரம்பத்துக்கும் முன்னர் தொற்றுநீக்கப்பட வேண்டும்.
- சாரதி, நடத்துனர்/உதவியாளர் மற்றும் சகல பயணிகளும் முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும். (இந்த தேவையை உணர்த்தும் சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்)
- ஒரு வாகனத்தில் குறித்த அதே ஊழியர் அணியை பணியில் ஈடுபடுத்துவது பாதுகாப்பானது.
- பணக் கையாளலை குறைக்கவும், பயணிகளை தமது பிரயாணத்துக்கான சரியான கட்டணத்தை மாத்திரம் கொண்டு வர ஊக்குவிக்கவும். (இது பற்றி அறிவுறுத்தும் சுவரொட்டிகளை காட்சிப்படுத்த வேண்டும்)
- வாகனத்தினுள் பிரவேசிக்கும் பகுதியில் ஹான்ட் சனிடைசர்/அற்ககோல் ரப் பொருத்தப்பட்டு, கைகளை தொற்று நீக்கும் வசதியை ஏற்படுத்தவும்.
- பயணிகளின் தொடுகைக்குட்படும் வாகனத்தின் சகல பகுதிகளும் தினசரி தொற்று நீக்கம் செய்யப்பட வேண்டும்.
- பயணிகளை ஏற்றுவதற்கு ஒரு கதவை மட்டும் பயன்படுத்த வேண்டும்.
- சுகாதார ஊக்குவிப்பு தகவல்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட தகவல்கள் போன்றன பொது தகவல் பரிமாற்ற கட்டமைப்பினூடாக வாகனத்தில் ஒலி/ஒளிபரப்பு செய்யப்பட வேண்டும்.
- பேருந்தின் ஜன்னல்களை திறந்து அல்லது AC ஊடாக போதியளவு காற்றோட்ட வசதியை ஏற்படுத்தவும்.
- ஒவ்வொரு பயணத்தின் பின்னரும் வாகனத்தை தொற்று நீக்கம் செய்யவும் - குறிப்பாக பொதுவான தொடுகைக்குட்படும் பகுதிகளை.
- சாரதி அல்லது பயணி வாகனத்தினுள் வெற்றிலை மெல்வது அல்லது புகைபிடிப்பது தடை செய்யப்பட வேண்டும்.

# முச்சக்கர வண்டிகள்/டெக்சிகள்

- அரசாங்க விதிமுறைகளின் பிரகாரம் 2 பயணிகள் மாத்திரம் பயணிக்க அனுமதிக்கப்படும்.
- வாகனத்தினுள் பிரவேசித்ததும் கைகளை தொற்று நீக்க நினைவூட்டவும், அல்லது சனிடைசரை வழங்கவும்.
- சாரதி அடங்கலாக அனைவரும் முகக் கவசம் அணிய வேண்டும்.
- வாகன சாரதி அல்லது பயணி எவரும் வாகனத்தினுள் புகைபிடிக்கவோ வெற்றிலை மெல்லவோ கூடாது.
- வாகனத்தினுள் இருக்கும் போது குறைந்தளவு உரையாடவும். வழியை காண்பிப்பதற்கு கூகுள் மெப் வசதியை பயன்படுத்தவும்.
- அனைவரும் தமது முகங்களை, மூக்கு, வாய் அல்லது கண்களை தொடக்கூடாது.
- முச்சக்கர வண்டிகளாயின், சாரதி மற்றும் பின்புற இருக்கைகளுக்கிடையே கடினமான பொலிதின் பொருத்தப்பட வேண்டும். (சாரதியின் பாதுகாப்புக்கு இது மிகவும் முக்கியமானதாகும்).
- முச்சக்கர வண்டியினுள் இருக்கும் போது, பயணி முறையாக அமர்ந்திருப்பதன் மூலமாக (முன்னால் வளைந்தவாறன்றி) பயணம் முழுவதும் பாதுகாப்பான தூரத்தை பேணக்கூடியதாக இருக்கும்.
- பயணிகளை மாற்றிய காசுடன் பயணத்தை பூர்த்தி செய்ய தயாராக இருக்குமாறு நினைவூட்டவும், இதனூடாக பயணிகள் மற்றும் சாரதியிடையிலான அநாவசியமான கைமாறல்களையும் தவிர்த்துக் கொள்ளலாம்.



# COVID-19 தொற்றிலிருந்து உங்களையும் ஏனையவர்களையும் பாதுகாத்தல்



கைகளை சவர்க்காரம் மற்றும் நீர் கொண்டு ஆகக்குறைந்தது 20 செக்கன்கள் வரை கழுவவும் அல்லது அற்ககோல் சார்ந்த ஹான்ட் சனிடைசரை கொண்டு தொற்றுநீக்கவும்.



வீட்டிலிருந்து வெளியேறும் போது முகக் கவசம் அணியவும்.



கண்கள், மூக்கு மற்றும் வாயை தொடுவதை தவிர்க்கவும்.



தடிமன் அல்லது காய்ச்சல் அறிகுறிகளை கொண்டிருக்கும் எவருடனும் தொடர்பை ஏற்படுத்துவதை தவிர்க்கவும்.



நீங்கள் சுகயீனமடைந்தால், வீட்டில் இருக்கவும் சனநெரிசலான பகுதிகள் மற்றும் ஏனையவர்களிடமிருந்து விலகியிருக்கவும்.



தும்மல் அல்லது இருமலின் போது உங்கள் வாய் மற்றும் மூக்கை முழங்கையால் மூடி அல்லது டிஷு ஒன்றை பயன்படுத்தவும். மூடியைக் கொண்ட கழிவுத் தொட்டியினுள் பயன்படுத்திய டிஷுவை இட்டு தொட்டியை மூடவும்.



கைகுலுக்க வேண்டாம். மாறாக கை அசைவு, தலை அசைவு அல்லது புருவத்தினூடாக வரவேற்பை வெளிப்படுத்தவும்.



உங்களுக்கு காய்ச்சல், இருமல் அல்லது சுவாசிக்க பிரச்சினை இருந்தால், மருத்துவ ஆலோசனையை நாடவும். உங்களின் முன்னைய பிரயாண தகவல்களை மருத்துவ சேவை வழங்குநருடன் பகிர்ந்து கொள்ள தவற வேண்டாம்.


**மேலதிக தகவல்களுக்கு தொடர்புகளுக்கு:**
லலீந்திர விக்ரமசிங்க
சிரேஷ்ட முகாமையாளர் - இடர் பொறிக்கட்டமைப்பு
மொபைல்: 0777 238 034 | மின்னஞ்சல்: laleendraw@fairfirst.lk



**மறுதலிப்பு:** இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்கள் உங்களையும், உங்கள் அன்புக்குவரியவர்களையும் **COVID-19** இலிருந்து பாதுகாக்கும் வகையில் அமைந்துள்ளன. இந்த ஆவணத்தின் ஏதேனும் ஒரு பகுதி தொடர்பில் அல்லது இந்த ஆவணத்தின் பிரகாரம் ஏதேனும் நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு உங்களுக்கு மேலதிக விளக்கங்கள் தேவைப்படின் நிபுணத்துவ ஆலோசனையை நாடவும்.


**COVID-19 காலப்பகுதியில் பாதுகாப்பாக பணிபுரிவது தொடர்பில் ஐக்கிய இராஜ்ஜிய அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட தகவல்களின் பிரகாரம் இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.**